ஆதிக்க சக்தி, பிற்போக்கு கும்பல்களால் தலை தூக்க முடியவில்லை

நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது திராவிட மாடல்

முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

▶ விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 21 சமூகநீதி போராளிகள் மணிமண்டபத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன், அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், எம்பி ஜெகத்ரட்சகன் உள்ளிட்டோர்.

விழுப்புரம், ஜன. 29: திராவிடம் இருப்பதால்தான் ஆதிக்க சக்தி, பிற்போக்கு கும்பல்களால் தலை தூக்க முடியவில்லை. இன்று நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது திராவிட மாடல்தான் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறினார்.

விழுப்புரம் வழுதரெட்டியில் 21 சமூக நீதி போராளிகளுக்கு ₹5.70 கோடியில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபம் மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமிக்கு ₹4 கோடியில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவகம் திறப்பு விழா மற்றும் 35 ஆயிரம் பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மணிமண்டபம், நினைவகம் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

சமீப காலமாக நான் சுற்றுப்பயணம் செய்த மாவட்டங்களில், அதிக அறிவிப்புக்களை பெற்ற மாவட்டம் இந்த விழுப்புரம் மாவட்டம் தான். நமக்கு நிதி ஒன்றுதான் தடையே தவிர, வேறு எந்தத் தடையும் கிடையாது. நிதி இல்லை, நிதி இல்லை என்று புலம்பிக்கொண்டு இருக்காமல், மக்கள் குறைகளை நீக்கிட, அதை நீக்கி, நிறைவேற்றுகின்ற அரசாக தி.மு.க. அரசு இருக்கிறது. சில எதிர்க்கட்சித் தலைவர்கள் வெறும் குறைகளை மட்டுமே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அது ஆட்சியின் குறை இல்லை. அவர்கள் சிந்தனையில் ஏற்பட்டிருக்கக்கூடிய குறைபாடு. அவர்கள் தானும் நல்லது செய்யமாட்டார்கள். அடுத்தவர்களையும் நல்லது செய்ய விடமாட்டார்கள். மக்களுக்கு நல்லது நடந்தால் அவர்களுக்குப் பிடிக்காது. அதைப் பற்றி கவலைப்படாமல் நாம் நம்முடைய கடமையை தொடர்ந்து ஆற்றிக்கொண்டு வருகிறோம்.

விழுப்புரத்தில் நடந்த தி.மு.க. மாநாட்டுக்கு முதன்முதலாக நான் தலைமை வகித்தேன். அப்போது கலைஞர் பேசும்போது, எனக்கு ஒரு அறிவுரையைச் சொன்னார். "நான் என்னுடைய 26வது வயதில் ஒரு மாநாட்டிற்கு தலைமை வகிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். ஸ்டாலினுக்கு அந்த வாய்ப்பு 50வது வயதில்தான் கிடைத்திருக்கிறது. இவ்வளவு தாமதமாக கிடைக்கக் காரணம், எதுவும் அவசரமாக, விரைவாக கிடைப்பதைவிட தாமதமாக கிடைத்தால் தான் அதற்கு வலு அதிகம். அந்த வலு உனக்கு சேர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டார். சொல்லிவிட்டு, மற்றொன்றையும் கூறினார். எல்லோரும் உன்னை அங்கீகரித்ததாக நினைத்து நீ நடைபோடக்கூடாது. எங்கிருந்து உனக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையோ அதை தெரிந்துக்கொண்டு எல்லோரிடமும் அங்கீகாரம் பெறவேண்டும் என்ற அணுகுமுறையை நீ கற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

அந்த அறிவுரையை என் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நெறிமுறையாக கொண்டு செயல்படத் தொடங்கினேன். அதனால்தான் வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து எந்தப் பாகுபாடும் பார்க்காமல் முதலமைச்சராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், 'நம்பர் ஒன் முதலமைச்சர்' என்பதைவிட 'நம்பர் ஒன் தமிழ்நாடு' என்பதுதான் என்னுடைய இலக்கு. அதற்காக தான் இந்தியாவையே திரும்பிப் பார்க்கின்ற திட்டங்களை செய்கிறோம்.

கட்சி அரசியல் பாகுபாடுகள் பார்க்காமல் உழைத்தால் கட்சி அரசியல் எல்லைகளை கடந்து மக்கள் ஆதரிப்பார்கள் என்பதை ஒவ்வொரு ஊருக்கும் நான் போகும்போது மக்கள் தரும் வரவேற்பும், அப்போது அவர்கள் முகங்களில் தெரியும் மலர்ச்சியும் எனக்கு எடுத்துக் காட்டுகிறது. அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி என்ற அடிப்படையில், 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற திராவிட மாடல் ஆட்சியை நாம் வழிநடத்திக்கொண்டிருக்கிறோம். மொத்தத்தில் திராவிடம்தான், இந்த நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கியது. அது இனியும் தொடரும். திராவிடம் இருப்பதால்தான், நாட்டின் பிற பகுதிகளில் இருப்பது போன்று, ஆதிக்க சக்திகளால், பிற்போக்கு கும்பல்களால் தலை தூக்க முடியவில்லை. அதனால்தான், போலிகள், துரோகிகள் துணைகொண்டு எதிரிகள் பலமுனை தாக்குதல் நடத்தி, நடத்தி சோர்ந்து போகிறார்கள்.

இன்றைக்கு நாம் பார்க்கின்ற இந்த நவீன தமிழ்நாடு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால், பேரறிஞர் அண்ணாவால், தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு இன்றைக்கு எல்லா துறைகளிலும் உன்னதமான இடத்தில் இருக்கிறது என்றால் அதற்கு காரணம், திராவிட மாடல். இந்த கொள்கை ஆட்சிக்கு உற்ற தோள் கொடுத்து, உறுதுணையாக இருக்கக்கூடிய, உறவாக இருக்கக்கூடியவர்கள் என்றும் தொடரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

> நமக்கு நிதி ஒன்றுதான் தடையே தவிர, வேறு எந்தத் தடையும் கிடையாது. நிதி இல்லை, நிதி இல்லை என்று புலம்பிக்கொண்டு இருக்காமல், மக்கள் குறைகளை நீக்கிட, அதை நீக்கி, நிறைவேற்றுகின்ற அரசாக தி.மு.க. அரசு இருக்கிறது. சில எதிர்க்கட்சித் தலைவர்கள் வெறும் குறைகளை மட்டுமே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சி என்றே மீண்டும் மீண்டும் சொல்வேன்

முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், மக்களாகிய உங்களின் வாழ்த்துகளோடு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உருவாக்கி வருகிறோம். யாருக்கும் யாரும் அடிமை இல்லை. எல்லாருக்கும் எல்லாம். இந்த திராவிடக் கருத்தியலை, எந்த சூழலிலும் சமரசம் செய்யாமல் செயல்படுத்திக் காட்டுவதுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய வாழ்க்கைப் பயணம். என்னைப் பொறுத்தவரை, என்னை முன்னிலைப்படுத்தி நான் எதையும் செய்வதில்லை, தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்தி தான் நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதனால்தான், நம்முடைய ஆட்சியை, திராவிட மாடல் ஆட்சி என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்கிறேன். இதை "ஸ்டாலின் ஆட்சி" என்று சொல்லி, தற்பெருமை தேடிக்கொள்ள விரும்பவில்லை. அந்த குறுகிய சிந்தனை எனக்கு எப்போதும் வந்ததில்லை. வரவும் வராது. ஏன் பல்வேறு விமர்சனம் வந்தாலும், மீண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி என்றுதான் நான் சொல்வேன். திராவிடம் தான், நமது தாய் நிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது என்றார்.

கல்வி, மருத்துவ சிகிச்சைக்காக

திமுக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக 15 பேருக்கு நிதியுதவி

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஜன.29: கல்வி, மருத்துவ சிகிச்சைக்காக திமுக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக 15 பேருக்கு நிதியுதவியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

திமுக இளைஞர் அணிச் செயலாளராக தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்து, இளைஞர் அணி அறக்கட்டளைக்கு திமுகவினரும், திமுக நிர்வாகிகள் பலரும் நன்கொடை வழங்கி வருகின்றனர். இவ்வாறு வழங்கப்பட்ட நிதி வங்கியில் நிரந்தர வைப்பு தொகையாக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் கிடைக்கும் வட்டித்தொகையை திமுக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின் பேரில் ஏழை- எளிய மக்களின் கல்வி- மருத்துவ சிகிச்சைக்காக மாதந்தோறும் நன்கொடையாக வழங்கி வருகிறது இளைஞர் அணி. அந்த வகையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, 2025 ஜனவரி மாதத்திற்கான பயனாளிகள் 15 பேருக்கு, திமுக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் நிதியுதவி வழங்கினார்.

இதில் கிர்கிஸ்தான் நாட்டிற்கு மருத்துவம் படிக்கச் சென்ற தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி, பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு மருத்துவம் படிக்கச் சென்ற ஸ்ரீநிதா மற்றும் ஸ்ரீநிஜா, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவர் பிரஜேஷ் உள்ளிட்ட 10 பேருக்கு கல்விச் செலவுகளுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த க.பாஸ்கர், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்திரஜித் ஆதவன், பொள்ளாச்சியைச் சேர்ந்த ஹர்சிக் உள்ளிட்ட 6 பேருக்கு மருத்துவ சிகிச்சைக்கான உதவித்தொகைகளை உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திமுக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, ஜி.பி. ராஜா, சீனிவாசன், பிரபு கஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, மாவட்ட அமைப்பாளர்கள் தங்கராஜ், சபரி கார்த்திக்கேயன், ஹக்கீம், சிவகுரு, வெங்கடேஸ்வரன், லோகேஷ், சுரேஷ் குமார், பாலாஜி, முகில் வேந்தன், ஜெயக்குமார் துணை அமைப்பாளர்கள் கோவை பாபு, உதயபூபதி, தனசேகரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

வேங்கைவயல் சம்பவம் தனிமனித பிரச்னைதான்

கழிவு கலக்கப்பட்ட தண்ணீர் யாருக்கும் விநியோகிக்கப்படவில்லை

ஆய்வில் உறுதி; ஐகோர்ட் கிளையில் அரசு தகவல்

மதுரை, ஜன. 29: மதுரை மாவட்டம், திருமங்கலத்தைச் சேர்ந்த கண்ணன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், ''புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் உள்ள மேல் நிலை குடிநீர் தொட்டியில் கடந்த 26.12.2022ல் மனிதக்கழிவு கலக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் விசாரிக்கின்றனர். விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை. யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி நிர்மல்குமார் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா ஆஜராகி, வேங்கைவயல் வழக்கு குறித்த முழுமையான அறிக்கையை தாக்கல் செய்தார். பிறகு அவர், "வேங்கைவயல் விவகாரத்தில் சாதியமோ தல் அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சியோ கிடையாது. இருவருக்குள் ஏற்பட்ட தனிமனித பிரச்னையால் இது போன்று நடந்துள்ளது. குறிப்பாக கடந்த 2 ஆண்டுகளாக இந்த வழக்கை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்து தற்போது குற்றப்பத்திரிகையை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கில் 3 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். 196 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டு அதில் உள்ள எண்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் 87 டவர் லொகேஷனில் ஆய்வு செய்து அதன் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

மேல்நீர்நிலை தேக்க தொட்டியில் இருந்து குற்றவாளிகளால் எடுக்கப்பட்ட செல்பி புகைப்படங்கள் மற்றும் தொடர்பு கொண்ட செல்போன் எண்கள் என அனைத்தும் ஆய்வுக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் குற்றவாளிகள் மற்ற நபர்களிடம் பேசிய ஆடியோக்கள் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்களிடம் குரல் மாதிரிகள் எடுக்கப்பட்டு அனைத்தும் ஆய்வகத்துக்கு அறிவியல் பூர்வமான ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அதில் பேசிய நபர்களின் ஆடியோக்கள் அனைத்தும் உண்மையானது என உறுதி செய்யப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தண்ணீர் தொட்டிக்கு ஏறும் வரை, அந்தத் தண்ணீர் தொட்டியில் எந்தவிதமான கழிவுகளும் கலக்கவில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டது. சரியாக 7.35 மணிக்கு மேல் தான் கழிவு கலக்கப்பட்டுள்ளது. கழிவு கலக்கப்பட்ட தண்ணீர் யாருக்கும் விநியோகம் செய்யப்படவில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றவாளிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல்போனில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் நேரம் வாரியாக ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த வழக்கு தீவிர புலனாய்வு விசாரணை முடிந்து விசாரணை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது'' என்றார். இதையடுத்து நீதிபதி, இந்த மனுவின் மீது உரிய தீர்ப்பு பிறப்பிக்கப்படும் எனக் கூறி தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார்.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட். லிட்.
CIN:U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோவுறினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் M எண்: +91– 93446 84194 / 98840 62068 / 99623 33307

பொது அறிவிப்பு

சர்ஃபாசி விதிகளின் விதி 8(6) உ/ப 9 (1)–க்கு இணங்க, M/s.J அண்டு J டிரேடர்ஸ் கணக்கில் அசையா சொத்துகளின் மின் ஏல விற்பனைக்கான எங்கள் பொது அறிவிப்பை, பைனான்சியல் எக்ஸ்பிரஸ் செய்தித்தாள் சென்னை/ கொச்சி பதிப்பு பக்கம் எண் 32 மற்றும் தினகரன் தமிழ் செய்தித்தாள் நெல்லை பதிப்பு பக்கம் எண் 07–ல், 24 ஜனவரி 2025 அன்று வெளியிட்டதை நாங்கள் குறிப்பிடுகிறோம்.
27 பிப்ரவரி 2025 அன்று மூன்று சொத்துகளுக்கும் நடைபெற திட்டமிடப்பட்ட மின் ஏலம் இதன்மூலம் நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்படுகிறது. (ராஜேஷ் B ஜூமானி)
மொபைல் எண். 9884062068
அதிகாரப்பூர்வ அலுவலர்
தேதி: 29.01.2025 ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
இடம்: சென்னை (ஓம்காரா PS06/2021–22 டிரஸ்டியின் டிரஸ்டியாக அதன் திறனில் செயல்படுகிறது)

தூத்துக்குடி மாநகராட்சி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இருஉறை முறை)
கோப்பு எண். இ1/4817/2024 நாள் : 28.01.2025
தூத்துக்குடி மாநகராட்சியில் Corporate Social Responsibility (CSR Fund) 2024-25 திட்டத்தின் கீழ் Construction and Renovation of Existing building for De-Addiction Centre at JS Nagar in South Zone பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகிறது.

பணியின் ஒப்பந்த மதிப்பு	:	ரூ.238.00 இலட்சம்
ஒப்பந்தப்புள்ளி படிவம் விபரம்	:	https://tntenders.gov.in என்ற இணைய தள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்து முழு விபரங்கள் பெறலாம்.
ஒப்பந்தபுள்ளி படிவம் இறக்கம் செய்தல்	:	03.02.2025 காலை 10.00 மணி முதல் 18.02.2025 மாலை 3.00 மணி வரை
முன்வைப்புத்தொகை (EMD) (இணையதளத்தின் வாயிலாக மட்டும் செலுத்தப்பட வேண்டும்)	:	ரூ.2,38,000/–
ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வு கூட்டம்	:	10.02.2025 காலை 11.00 மணி
ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தின் வாயிலாக சமர்பிக்க வேண்டிய நாள் மற்றும் நேரம்	:	18.02.2025 மாலை 03.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தின் வாயிலாக திறக்கப்படும் நாள் மற்றும நேரம்	:	18.02.2025 மாலை 03.30 மணிக்கு

இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளை பின்பற்றி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேல்குறிப்பிட்ட அரசு இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ/ 338 /ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி

TNPL TAMILNADU NEWSPRINT AND PAPERS LIMITED

TNPL, a Government of Tamil Nadu Enterprise and a reputed Paper, Paper Board and Cement Manufacturing Company having its manufacturing facility at Karur District (Unit-I) and Trichy District (Unit-II) with a turnover of around ₹5000 Crores intends to hire the following executives for its Paper Mill (Unit-I):-

Sl. No.	Name of the post	No. of post	Reservation
1	Medical Officer (In the level of Senior Officer) (On Contract Basis)	3	GT

For details relating to age, qualification, experience, etc., please visit TNPL's website : **www.tnpl.com/careers. Bio-data format is available in our website.**
Candidates who conform to the job requirements as given in the website may apply in the prescribed format by post in strict confidence superscribing the name of the post (both in Bio-data and top of the Envelope) **within 15 days** from the date of release of this advertisement to the below mentioned address, giving full details of age, qualification with year of passing, experience, community, salary drawn and position being held along with copies of testimonials towards proof for the same.
Bio-data form with insufficient documentary proof will be summarily rejected.

GENERAL MANAGER (HR)
TAMIL NADU NEWSPRINT AND PAPERS LIMITED
KAGITHAPURAM - 639 136, KARUR DISTRICT, TAMIL NADU
www.tnpl.com
DIPR/87/DISPLAY/2025 *TNPL - Maker of bagasse based eco-friendly Paper*

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்)
(ISO 9001 - 2015 CERTIFIED COMPANY)
எண்.132, ஈ.வெ.ரா. சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 39 / 2024-2025 நாள் : 28.01.2025
சென்னை பெருநகரம், புதுப்பேட்டை ஆயுதப்படை வளாகத்தில் அமைந்துள்ள இராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் சுற்றுச்சுவர் மற்றும் விழா மேடை கட்டுதல். (மே/பொ/செ.வ/வ.பி./212/2025)
வேலையின் தோராய மதிப்பு ரூ.108.59 இலட்சம் + GST @ 18%.

1)	ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு http://tntenders.gov.in & www.tnphc.com-ல் தெரிந்துகொள்ளவும்.		
2)	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் / பதிவேற்றம் செய்வதற்கான நாள் மற்றும் நேரம்	:	12.02.2024 நண்பகல் 12.00 மணி முதல் 18.02.2025 மாலை 6.00 மணி வரை.
3)	ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம்	:	20.02.2025 மாலை 3.15 மணிக்கு மேலே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில்.

செ.ம.தொ.இ./329/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், சென்னை வட்டம், த.நா.கா.வீ.வ.க. சென்னை.

மீனவர்கள் மீது... முதல் பக்க தொடர்ச்சி

கடல் எல்லையை தாண்டி மீன்பிடித்ததாக கூறி படகை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர். இதனால் அச்சமடைந்த செந்தமிழ், பாபு ஆகிய 2 மீனவர்கள் கடலில் குதித்தனர். அப்போது ஒரு மீனவருக்கு கால் முறிவு ஏற்பட்டது. மற்றொருவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

துப்பாக்கி முனையில் படகில் இருந்த 11 மீனவர்கள் மற்றும் கடலில் தத்தளித்த 2 மீனவர்களையும் கைது செய்து பறிமுதல் செய்யப்பட்ட படகுடன் யாழ்ப்பாணம் அழைத்து சென்றனர்.

பின்னர் இலங்கை மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இதில் படுகாயம் அடைந்த 2 மீனவர்கள் யாழ்ப்பாணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி படகுடன் கைது செய்யப்பட்ட சம்பவம் காரைக்கால், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் கிராமத்தில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 13 மீனவர்களை விடுவிக்க கோரி ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, வைத்திலிங்கம் எம்பி ஆகியோர் கடிதம் எழுதியுள்ளனர்.

மண்டபம் மீனவர்கள் விரட்டியடிப்பு

ராமேஸ்வரம் அருகே மண்டபம் கோவில்வாடி, வடக்கு கடலோர பகுதி மீன்பிடி இறங்கும் தளத்தில் இருந்து, 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் நேற்று முன்தினம் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அவ்வழியாக படகில் வந்த இலங்கை கடற்படையினர், இந்த பகுதியில் மீன் பிடிக்க வரக்கூடாது என எச்சரித்து விரட்டியடித்தனர். இதனால் மீனவர்கள் கடலில் விரித்து இருந்த மீன்பிடி வலைகளை சேகரித்துக் கொண்டு அச்சத்தில் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

தீவிரவாதிகள் போல் சுட்டுப்பிடிப்பதா? பெண்கள் ஆதங்கம்

13 மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தி கைது செய்ததை தொடர்ந்து 3 மாவட்ட கிராம மீனவபெண்கள் அந்தந்த பகுதிகளில் கூடி மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதை கண்டித்தும், மீனவர்களையும் படகையும் விடுவிக்குமாறு ஒப்பாரி வைத்ததோடு கண்ணீர் மல்க ஒன்றிய , மாநில அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். அப்போது மீனவ பெண்கள் கூறுகையில், மீனவர்கள் மீன் பிடிக்க தான் சென்றுள்ளனர். தீவிரவாதிகள் போல் சுட்டு பிடித்தது ஏன்? இதற்கு உரிய தீர்வு காணாவிட்டால் தீக்குளித்து தற்கொலை செய்து கொள்வதை தவிர வேறு வழியில்லை என்றனர்.

கடன் தொல்லையால்

தொழிலதிபர், மனைவி, மகளுடன் தற்கொலை

சேலம், ஜன.29: கடன் தொல்லையால் தொழிலதிபர், மனைவி, மகளுடன் தற்கொலை செய்து கொண்டார்.

சேலம் அரிசிபாளையம் முத்தையால் தெருவை சேர்ந்தவர் பால்ராஜ்(45). இவர், வெள்ளி தொழில் செய்து வந்தார். இவரது மனைவி ரேகா(38). மகள் ஜனனி(16), தனியார் பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்தார். வங்கியில் பால்ராஜ் கடன் வாங்கி வீடு கட்டினார். வெள்ளி தொழிலும் சரியாக நடைபெறவில்லை. இதனால், அவர் வங்கி கடனை கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனிடையே வங்கியில் இருந்து வீட்டுக்கு வந்தவர்கள் பணத்தை கட்டும்படி கேட்டுள்ளனர். நேற்றும் காலையிலேயே வங்கியில் இருந்து வந்துள்ளனர். வெளியே நின்று அழைத்தும் யாரும் வீட்டில் இருந்து வெளியே வராததால் அவர்கள் சென்றுவிட்டனர். அக்கம் பக்கத்தினர் அவரது வீட்டுக்கு சென்று பார்த்தபோது கதவு திறந்து கிடந்துள்ளது.

மேல் மாடியில் உள்ள அறையில் பால்ராஜ், ரேகா, ஜனனி ஆகியோர் தூக்கிட்ட நிலையில் சடலமாக தொங்குவதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். இதுகுறித்து பள்ளப்பட்டி போலீசார் விசாரணை நடத்தினர். பால்ராஜ் எழுதி வைத்திருந்த கடிதத்தில், அதிகளவு கடன் வாங்கி விட்டேன். அதனை திருப்பி செலுத்த முடியவில்லை.

எனவே, நாங்கள் தற்கொலை செய்து கொள்கிறோம் என எழுதி இருந்ததாக கூறப்படுகிறது. வங்கி தவிர வேறுயாரிடமும் கந்து வட்டி வாங்கி கொடுமை படுத்தியதால் தற்கொலை செய்துள்ளனரா என்றும் போலீசார் விசாரிக்கின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு கோனியம்மன் திருக்கோயில் அலுவலகம்,
பெரியகடைவீதி, கோவை நகர், கோவை மாவட்டம்
இணைய வழி - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 1/2025 நாள்: 31.01.2025 ஒப்பந்த வகை: LUMPSUM
அருள்மிகு கோனியம்மன் திருக்கோயில், செயல் அலுவலர் அவர்கள் திருக்கோயிலின் கீழ்காணும் பணிக்கு தமிழ்நாடு அரசுத்துறைகளில் பதிவு பெற்ற, நடப்பில் உள்ள, தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (www.tntenders.gov.in) - மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் பெயர்	பணியின் தோராய மதிப்பு ரூ.	முன் வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்தகாரர்கள் தகுதி
1	அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் அன்னதான கூடம் கட்டும் பணி	ரூ. 81,94,276/-	ரூ.51,000/-	8 மாதங்கள்	தமிழ்நாடு அரசு துறை/ அரசு நிறுவனங்களில் பதிவு பெற்ற நடப்பில் உள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள்

1. இணைய வழியில் அலுவலக வேலை நாட்களில் இலவசமாக ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்ய : 31.01.2025 முதல் 17.02.2025 5.00 மணி வரை
2. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை தரவேற்றம் செய்ய : 18.02.2025 பிற்பகல் 03.00 மணி வரை
3. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் : 18.02.2025 பிற்பகல் 03.30 மணி

முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் (www.tntenders.gov.in)-ல் மட்டுமே பெறப்படும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.
செ.ம.தொ.இ.346/ஒப்பந்தப்புள்ளி/2025 செயல் அலுவலர்

aavin THE TAMIL NADU COOPERATIVE MILK PRODUCERS' FEDERATION LIMITED,
AAVIN ILLAM, 3-A, PASUMPON MUTHURAMALINGANAR SALAI, NANDANAM, CHENNAI-600035.
TELEPHONE : 044-23464500, FAX :044-23464505, E-MAIL: aavindgmeng@yahoo.co.in
Ref.No.272/Proj.2/2025 NOTICE INVITING TENDER (e-Submission Only) Dated: 28.01.2025
The TCMPF Ltd., invites **TWO PART TENDERS** by way of **e-Submission through e-Procurement Portal** from the reputed Manufacturers / Authorized Dealers for following items / works for TCMPF/DCMPU Dairies under Federation / Union Own Funds / Schemes:-

S. No.	Name of the works / Items		EMD Value
1.	Rate Contract for (i).Electronic Milk Adulteration Testing Machine (Advanced) (ii).Solar based UPS (iii) BMC Heat